தொகுதி-6 எண் 2
Vol. 6 No. 2

பங்குனி - ஆனி 2049
April - June 2018

ISSN : 2321 - 984X

Chief Editor
Dr. M. Sadik Batcha

Advisory Editor
Dr. N. Chandra Segaran

Editorial Board
Dr. MAM. Rameez
Dr. R. Jeya Raman
Dr. M. Pandi
Dr. Aranga. Pari
Dr. A. Ra. Sivakumaran
Dr. A. Syed Zakir Hasan
Dr. Kumar
Dr. S. Easwaran
Dr. P. Jeyakrishnan
Dr. G. Veeramani
Dr. K. Narmatha
Dr. S. Balasubramanian
Dr. K. Vasudevan
Dr. F. Selvakumaran
Dr. T. Vishnu Kumar
Dr. S. Rajendra
Dr. B. Sathiyamoorthy
Dr. Govindaraj
Dr. Kumara Selva
Dr. Senthil Prakash
Dr. R. Kurinchiventhan
Dr. Sr. Jeusin Francis
Dr. R. Rajalakshmi
Dr. R. Malarvizhi
Mangayarkarasi
Dr. P. Ibrahim
Dr. K. Sirajudeen
Mr. K. Saravanan
Dr. T. Jegathesan

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்

UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL

நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் கல்வி ஆய்விதழ்)

Journal of Modern Thamizh Research

(A [illegible] International Multilateral Thamizh Journal)

Published by

RAJA PUBLICATIONS

10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

16 பகுதி-2 Part -2

தூது இலக்கியத்துள் நாட்டுப்புற இலக்கியப் பண்புகள்

முனைவர் பி.எஸ். செல்வராணி
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி, (தன்னாட்சி),
பெரம்பலூர், தமிழ்நாடு, இந்தியா.

முன்னுரை

தமிழ்மொழியை வளப்படுத்தும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகத் தூது இலக்கியமும் திகழ்கின்றது. காதல்கொண்ட ஓர் ஆண் அல்லது பெண் உயர்திணையினரிடம் அல்லது அஃறிணையிடம் தன் காதல் துயரைக் கூறித் தூது சென்று வருமாறு வேண்டும் பொருளைக் கருவாகக் கொண்டதே தூது இலக்கியம் எனப் பொதுவாக இலக்கணம் கூறப்படுகின்றது. ஆனால் கிடைக்கப்பெறும் தூது நூல்களைக் காணும்போது காதல் துயர் மட்டுமன்றி அரசியல், சமுதாயம் மற்றும் தனிப்பட்ட காரணங்களும் தூது இலக்கியத்தின் பொருளாக அமையுமாற்றை உணர முடிகின்றது.

இலக்கிய உலகில் கி.பி. 14ஆம் நூற்றாண்டில் தான் முதல் தூது நூல் தோன்றியுள்ளது எனினும் அதற்கு இலக்கியத்திலேயே தூது விடுப்பதாக அமைந்த பாடல்களைக் காணமுடிகின்றது. சங்க இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், தற்கால இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம் ஆகியனவற்றுள் தூதுச் செய்திகள் காணப்படுவதுடன் அவற்றுள் அரச அங்க மாலை, உலா, அங்கமாலை, அகப்புறப்படை, பயண இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம் ஆகியவற்றின் கூறுகளையும் தனக்கேயுரித்தே கொண்டு விளங்குமாற்றைத் தூது இலக்கிய வகையின் சிறப்புகளுள் ஒன்றாகக் கொள்ளலாம். அவ்வகையில் தூது நூல்களில் இடம்பெறும் நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் இவற்றை இவண் காணலாம்.

தூது நூல்களும் நாட்டுப்புற இலக்கியக் கூறுகளும்

நாட்டுப் புறப்பாடல்களே எல்லாவற்றிற்கும் முன்னோடியாகக் கருதப் பெறுமாற்றால் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகிய தூது நூல்களிலும் நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் ஊடாடி நிற்கின்றன எனக் கூறலாம்.

பாடுபடு பொருள்கள்

நாட்டுப்புறப் பாடல்களில் இறைவன், மன்னன், வள்ளல், அருஞ்செயல் புரிந்தோர், சமுதாயத்தில் தாழ்நிலையில் வாழ்வோர், மக்கள் மனதைக் கவர்ந்த பொருள்கள் எனச் சமுதாயத்தில் உயர் நிலையிலுள்ளோர்களும் தாழ்நிலையிலுள்ளோர்களும் சாதாரண பொருட்களும் பாடற்பொருளாக அமையலாம்.

தூது நூல்களிலும் இறைவன், ஞானக்குரவர், மன்னன், வள்ளல், தேசபக்தர், அவதானி, சாதாரண மனிதன், அறிஞர், இயக்கன், புலவர், பாங்கி, இயக்கி, திருத்தட்டேந்தும் பெண், நடனமாது, வேசி, விறலி என உயர்நிலை நிலையிலுள்ளவர்களும் இடம் பெறுகின்றனர். மட்டுமின்றி யானை, கழுதை, பூனை, மான் போன்ற விலங்குகளும், கிள்ளை, அன்னம், வண்டு, காக்கை, குயில், மயில் போன்ற பறவைகளும், தாமரை, அன்பு, நெஞ்சு, பணம், சவ்வாது, துகில், செருப்பு, தந்தி, தமிழ், மேகம், நெல், படுக்கை, பழையது, பாக்கு, புகையிலை, பொன், தென்றல், வெற்றிலை என்பனவும் பாடற் பொருள்களாக அமைவதுடன் தூது நூல்களில் இன்றியமையா அங்கமாகவும் இவை திகழ்கின்றன.

வெளியீட்டு முறை

இலக்கியத்தைப் படைக்கும் புலவர்கள் பொருட் புலப்பாட்டிற்காகப் பலவேறு வெளியீட்டு முறைகளைக் கையாள்வர். பழமொழிகள், விடுகதைகள், நம்பிக்கைகள், நாட்டுப்புறப் பேச்சுக் கூறுகள், நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறக்